[2005 பிப்ரவரி 2

11—

தொழிற்பேட்டை

***42393—திரு. வெ. ஏழுமலை:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, வெண்மணியாத்தூர் ஊராட்சியில் சிட்கோ மூலம் நிலம் தேர்வு செய்யப்பட்டும், இதுவரை தொழிற்பேட்டை தொடங்கப்படாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் தாலுகா, செஞ்சி தொகுதியில் உள்ள ஆத்தூர் கிராமத்தில் 40 ஏக்கர் நிலம் 1996 ஆம் ஆண்டில் சிட்கோவிற்கு ஆர்ஜிதம் செய்யப்பட்டது. தொழில் முனைவோர் அறியும் பொருட்டு, செய்தித்தாள்களில் விளம்பரமும் செய்யப்பட்டது. எனினும், தொழில் முனைவோரிடமிருந்து இதற்கு எதிர்பார்க்கப்பட்ட வரவேற்பு இல்லாத காரணத்தால், தொழிற்பேட்டை தொடங்க வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வெ. ஏழுமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிட்கோ மூலம் வெண்மணியாத்தூர் ஊராட்சியில் தொழில் தொடங்க பொது மக்களிடமிருந்து வரவேற்பு இல்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினார்கள். அரசு அங்கு தொழில் தொடங்குபவர்களுக்குச் சிறப்புச் சலுகைகள் அளித்து, தொழில் தொடங்க முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொழிற்பேட்டை தொடங்க வரக்கூடிய தொழில் முனைவோர்களுக்குப் பல்வேறு மானியங்களைக் கொடுத்து, சிறு தொழில்களை ஊக்குவிக்கக்கூடிய விதத்தில் பல்வேறு

இடங்களிலே தொழிற்பேட்டை அமைக்கப்பட்டு, அதன் மூலம் தொழில் உற்பத்தி பெருகிக் கொண்டிருக்கிறது. வெண்மணியாத்தூர் என்கிற இடத்தில் தொழிற்பேட்டை தொடங்குவதற்கு பல நேரங்களில் தொழில் முனைவோரிடத்திலேயிருந்து அந்த இடங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று செய்தித்தாள்களில் விளம்பரம் அறிவித்தும்கூட, அவர்கள் வராத காரணத்தால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வெ. ஏழுமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிட்கோ மூலம் தொழிற்பேட்டை தொடங்குவதற்கு 40 ஏக்கர் நிலம் அரசால் கையகப்படுத்தப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த 40 ஏக்கர் நிலத்தைத் தனியார் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது. அதைத் தடுத்து நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் ஆக்கிரமிப்பு இருக்குமேயானால், யார், யார் ஆக்கிரமித்திருக்கிறார்கள் என்பது அரசின் கவனத்திற்குத் தெரிய வந்தால், காவல் துறையின் உதவியோடு அந்த இடத்தை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 12, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

12—

குளியல் சோப்பு அலகு

***49708—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரில் கதர் வாரியம் மூலம் குளியல் சோப்பு தயாரிக்கும் அலகு ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?